


நெல்லை மாவட்டம் திசையன்விளை பணிமனையில் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட தொழிலாளர்கள் காத்திருப்பு அறை துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் முன்னிலையில் துவக்கி வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ஒன்றிய பேரூர் கழகம் மற்றும் சார்பு அணி சார்பில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர்பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற அகில இந்திய அளவிலான மகளிர் கபடி போட்டியில் முதலிடம் பெற்ற குஜராத் அணிக்கு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கோப்பை மற்றும் பரிசினை வழங்கினார். உடன் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் காளிமுத்து மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி சீலப்பாடி ஊராட்சி ஏ.எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை பார்வையிட்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ. பி. செந்தில்குமார் மனுதாரர்களின் கோரிக்கைகளை உடனடியாக தீர்வு கிடைத்திட அரசு அலுவலர்கள் செயல்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். இந்நிகழ்வில் திண்டுக்கல் வட்டாட்சியர், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி, திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் வெள்ளிமலை, பொதுக்குழு உறுப்பினர் அக்பர், திண்டுக்கல் கிழக்கு இலக்கிய அணி இ ல.கண்ணன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ராஜா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வெங்கடேஷ், ஒன்றிய கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.





தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் டி. ராஜகோபாலன்பட்டி ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ உங்கள் குறைகளை வீட்டிற்கு வந்து கேட்டறிந்து தீர்வு காணும் முகாம் கொண்டமநாயக்கன்பட்டி தனியார் திருமண மண்டபத்தில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜி.கே.பாண்டியன் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் காரைக்குடி மண்டல பொதுக்குழு கூட்டம் பரமக்குடி போக்குவரத்து நகரில் பொதுச் செயலாளர் டாக்டர்.பச்சம்மாள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணைத் தலைவர் கபீரியல் பொருளாளர் ராஜேந்திரன் மற்றும் காஞ்சி, வீரபாண்டி,மலைக்கண்ணு,உட்பட மத்திய சங்க உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பட்டாசு தொழிற்சாலை விபத்துகளில் பெற்றோரை இழந்த 38 குழந்தைகளுக்கு ரூ.5,32,000 மாதாந்திர உதவித் தொகைக்கான ஆணைகளை வழங்கினார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாநகராட்சி மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் 58 – வது வார்டு அதிக வாக்கு பெற்றது. அதேபோல் இன்று மதுரையில் உறுப்பினர் சேர்த்தல் பட்டியலில் முதலிடம் படிவத்தை மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ.விடம் வழங்கப்பட்டது வழங்குவோர் மா.ஜெயராம் எம்.சி. மற்றும் ராஜா 58அவது வட்டச் செயலாளர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் பண்ணைபுரம் பேரூரில் மல்லிங்கேஸ்வரர் திருக்கோவில் சுமார் 68 லட்சம் மதிப்பில் திருப்பணிகள் நடைபெறுவதற்கு மற்றும் காந்திநகர் முதல் மல்லிங்கேஸ்வரர் கோவில் வரை புதிய தார்ச் சாலை சுமார் 1.43 கோடி மதிப்பில் அமைக்க அடிக்கல் நாட்டு விழா தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம்.என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார் உடன் ஒன்றிய செயலாளர் குமரன், பேரூர் செயலாளர் இளங்கோவன் பண்ணயபுரம் பேரூராட்சி தலைவர் லட்சுமி இளங்கோ. துணைத் தலைவர் சுருளி வேல்.கவுன்சிலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க உசிலம்பட்டியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச்செல்வன் பங்கேற்று பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உடன் உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப்மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரியிடம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் சந்தித்து கோரிக்கைமனுக்களை வழங்கி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் அருகில் ஒன்றிய கழக செயலாளர்கள் சி.என்.சண்முகம், பி.டி.சந்திரன், பா.சம்பத், ஏ.எல்.விஜயகுமார், மோ.ரமேஷ் மற்றும் செங்குட்டவன் திருவேங்கடம், வி.ஜி மோகன், சரவணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.